## சேலம் மண்டல வனப்பாதுகாவலரது செயல்முறை ஆணை

### பிறப்பிப்பவர் : திரு.ஆ.பெரியசாமி, இ.வ.ப.,

***

செ.மு.ஆ.எண்.6514/2019 ப2 நாள். 18.06.2021

பொருள் : பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – காலஞ்சென்ற வனக்காப்பாளர் திரு.பி.வெங்கடாசலபதி, மகன் திரு.வெ.பார்த்தசாரதி கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக நியமனம் செய்தது – பணியினை வரன்முறை செய்து – ஆணை வெளியிடப்படுவது – தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை நாள்.26.02.2021
2. கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் தலைமை வனப்பாதுகாவலர் ந.க.எண்.6514/2019/ப2, நாள்.06.09.2019.
3. திரு.வெ.பார்த்தசாரதி, நாமக்கல் மனு நாள்.25.09.2019.
4. இவ்வலுவலக ந.க.எண்.6514/2019 ப2, நாள். 04.10.2019.
5. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத்தலைவர்), சென்னை ண2/18995/2015, நாள்.19.11.2019.

********

திரு.பி.வெங்கடாசலபதி, வனக்காப்பாளர், முன்னால் ஆத்தூர் வனக்கோட்டத்தில் (தற்பொழுது சேலம் வனக்கோட்டம்) மாவட்ட வன அலுவலகத்தில் வனக்காப்பாளராக பணிபுரிந்து வருகையில் உடல்நிலை சரியின்மை காரணமாக 28.01.2006 அன்று காலமானார். இறந்த அரசு ஊழியரின் மகன் திரு.வெ.பார்த்தசாரதி என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சென்னை அவர்களது ந.க.எண்.ண2/18995/2015, நாள்.06.08.2019–ல் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யும் பொருட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டது. பார்வை 2–ல் காணும் இவ்வலுவலக கடிதத்தின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தேர்வு செய்யப்பட்டு, சேலம் மண்டல வனப்பாதுகாவலர் அலுவலகத்தில் பணியமர்த்தப்பட்டு 15.11.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

..2

அரசாணை (நிலை) எண். 48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை நாள்.26.02.2021-ல் 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்தவித விதித்தளர்வு (Relaxtion of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு, சம்மந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing Authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர் (One Level Higher then the Appointing Authority) அரசு பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்திட உரிய அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. திரு.வெ.பார்த்தசாரதி, இளநிலை உதவியாளர் பணியமர்வு நிகழ்வில் எவ்வித விதி தளர்வும் செய்யப்படவில்லை. விதிவிலக்கும் தேவைப்படவில்லை.

எனவே மேற்படி அரசாணையின்படியும், அரசாணை எண்.32 E&F (FR-II) துறை நாள்.08.03.2019-ன்படியும் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்ட காலஞ்சென்ற வனக்காப்பாளர் திரு.பி.வெங்கடாசலபதி என்பவரின் மகன் திரு.வெ.பார்த்தசாரதி என்பவரின் இளநிலை உதவியாளர் பணியினை, தனியர் பணியில் சேர்ந்த நாளான 15.11.2019 முற்பகல் முதல் வரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள

18/6/2021

வனப்பாதுகாவலர்
சேலம் மண்டலம், சேலம்.

பெறுநர்

திரு.வெ.பார்த்தசாரதி, இளநிலை உதவியாளர்
வனப்பாதுகாவலர் அலுவலகம், சேலம்

18.6.2021

18.06.2021

18/6

நகல்: முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (துறைத் தலைவர்), சென்னை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் : செயல்முறை ஆணை இருப்பு கோப்பிற்கு
நகல் : பணிப்பதிவேட்டிற்கு.